விலை சதம்: -/25

# காந்தீயம்

> தொண்டு
>
> தொண்டுதான் உண்மை அன்பைக் குறிக்கும்; வாய்ச் சொல்லல்ல.
>
> —மகாத்மா காந்தி

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICALS DIVISION

மலர் 15 | காந்தி நிலையம்—உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 108) 1978 யூன்—செப். | இதழ் 9-12

# கஸ்தூரிபாய் இல்லமும் அதன் சமுதாய நோக்கங்களும்

இவ்வுலகத்தின் இயக்கம் மிகவும் விசித்திரமானது. சுயநலம், தன் குடும்பநலம் என்ற குறுகிய சிந்தனை வட்டத்துக்குள் சுயநலம் ஒன்றே தம் கொள்கையாய் தம் பொருள், காணி, வீடு ஒன்றே நோக்காய் பலர் அலைகின்றனர். இந்த விசித்திர உலகுக்குள்ளும் சேற்றில் மலர்ந்த செந்தாமரை போன்று சில பொதுநலவாதிகள் காலத்துக்குக் காலம் தோன்றுகிறார்கள். தன்நலம், தம்குடும்ப நலம், தம் தேச நலம் இவற்றிற்கு மேலாக இவ்வுலகிலுள்ள சகல ஜீவராசிகளின் நலத்திலும், அவர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் தம் வாழ்வைச், சிந்தையைச் செலவிட்ட தியாகிகள் தோன்றுமலில்லை. உலகிலுள்ள அத்தனை துன்பங்களையும் துடைக்கும் பெரு நோக்கே இலட்சியமாகக் கொண்டு, அவதரித்த மகான்களுள் முதன்மையானவர் காந்தியடிகள் என்றால் அது மிகையாகாது.

காந்தியடிகள் பற்றி அறியாதார் அவர் கொள்கைதனை அலசிப் பாராதார் மிகக் குறைவென்றே சொல்ல வேண்டும். அந்தளவிற்கு எமக்குப் பரிச்சயமான அந்த மகானின் கொள்கைகளை விட அவர் சொந்த வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பார்த்தல் நம் போன்ற இயக்கங்களை நடத்துபவர்களுக்கும், தொண்டு செய்பவர்களுக்கும் மிகப் பொருந்துமென நான் நினைக்கிறேன். சத்திய சோதனைகள் மூலம் அந்த மகான் தன்னைத் தானே சுய விமர்சனம் செய்தார். அவர்தன் வாழ்க்கையில் ''உன்னிடம் இரு ஆடைகள் இருந்தால் ஒன்றை ஆடை அற்றவனுக்கு கொடுத்துவிடு'' என்ற யேசுநாதரின் கொள்கைப்படி தனி ஓர் ஆடையையே அணிந்து வந்தார். இவ்வாறு தன் வாழ்க்கையை மிகவும் எளிமையாக நடாத்தினார்.

இன்று நம்மில் பலர் இயக்கங்கள், கொள்கைகள், தொண்டுகள் என்று ஊக்கமாயிருக்கின்ற போதிலும், காந்தீயத்தைப் பற்றி மேடைக்கு மேடை விமர்சிக்கின்ற போதிலும், சொந்த வாழ்க்கையில் பல நயங்களை இழக்கத் தயாராக இல்லை. இதுவே எமக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம். நாமும் எளிமையான உள்ளமும், பரந்த நோக்கும் தெளிந்த சிந்தையும் உள்ளவராய் வாழ முயற்சிக்க வேண்டும்.

காந்தியடிகள் கண்ட கனவுகள், அன்னை கஸ்தூரிபாய் கண்ட கனவுகள் வெறும் கனவுகளாகவே இருக்கின்றன; அவர்களின் எண்ணங்களும், கொள்கைகளும் மக்கள் மனங்களிலிருந்து நீங்கிக் கொண்டிருக்கின்றன என்று பலர் கெக்காளமிட்டுக் கொண்டு இருக்கும் இவ்வேளையில் அண்ணல் காந்தியினதோ, அன்னை கஸ்தூரிபாயினதோ கொள்கைகள் சிதைந்து போய்விடவில்லை, இன்னும் இருந்தே வருகின்றன என்று அன்னை கஸ்தூரிபாய் இல்லம் போன்ற உயர்ந்த நோக்கங்களைக் கொண்ட தொண்டாற்றும் நிலையங்கள் மக்களுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையங்களைக் காணும் எந்தவொரு மனிதனும் மிகவும் மனம் மகிழ்வடைவான் என்பதில் ஐயமில்லை,

அன்னை கஸ்தூரிபாய் இல்லம் இக்கொடிய உலகத்தின் சுரண்டலுக்கும், கொடுமைக்கும் பலியான பல இளம் பெண்களின் வாழ்க்கையில் கைகொடுத்து உதவி வருகின்றது. அவர்களை நற்பிரசையாக்குவதே இந்நிலையத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சமுதாயத்தில் தம்மிரு கைகளையும் கொண்டு உழைத்து நேர்மையான, எளிமையான வாழ்க்கையை நடாத்த அவர்களுக்கு வழிகாட்டுகின்றது. அவர்கள் இவ்வுலகில் சிறந்த மாணிக்கங்களாக ஒளி வீச வேண்டும் என்பதே இவ்வில்லத்தின் அரிய நோக்காகும். இந்நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் மொழி, மத வேறுபாடின்றி ஆவன செய்ய இந் நிலையம் ஆர்வம் கொண்டுள்ளது. ஆயினும் தற்போது ஒரு குறித்த தொகையினருக்கே உதவி செய்யக் கூடியதாயுள்ளது. நாளடைவில் இது விரிவடைந்து, மக்கள் அன்பும் ஆதரவும் உள்ளோராக மாறி நல்வாழ்வு

[● 4ஆம் பக்கம் பார்க்க]

★ காந்தி நிலையம், கஸ்தூரிபாய் இல்லம் - சிறப்புமலர் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி நிலையம்

உருத்திரபுரம், [இலங்கை]

தொலைபேசி; 254

(கிளிநொச்சி)

காந்தி ஆண்டு 108

1978 யூன், யூலை, ஓகத்து, செப்ரெம்பர்.


# காந்தி நிலையம்

ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன், காந்தியடிகள் இந்த நாட்டிற்கு வருகை தந்தார்கள்.

ஏற்கனவே, ஓரளவு விழித்துக் கொண்ட இந்நாட்டு மக்கள் மத்தியில், அடிகளாருடைய வருகை மிகப் பெரியதோர் மனமாற்றத்தையும் எழுச்சியையும் பொங்கிப் பெருகச் செய்தது.

அரசியலில், விடுதலை வேட்கை வீறு கொண்டது.

சமூகத் துறையில், சாதிக் கொடுமைக்கு ஆளாகியிருந்த அனைவரிடத்தும் சமத்துவ உணர்ச்சி முகிழ்த்தது.

தீண்டாமை ஒழிப்பு இயக்கம் யாண்டும் பரவியது.

சமயத் துறையில், தெய்வ நம்பிக்கை, தார்மீக உணர்வு முதலிய புனித இயல்புகள் மறுமலர்ச்சி அடைந்தன; சமய சாதனங்களுள் 'தரித்திர நாராயண ஆராதனை' என்னும் மக்கள் சேவையாம் மகத்தான சாதனமும் மகேஸ்வர பூசா முறையாக மதிக்கப்பட்டது. சுருங்கச் சொல்லின், ஒரு புதிய புனிதமான தார்மீக புரட்சிக்கே அடிகளார் இந்நாட்டில் அப்போது வித்து இட்டார்கள் என்றே சொல்லலாம்.

காந்திவழி நிற்போம் என்று பலர் — படித்தவர்களும் பாமரர்களும் கூட விரதம் பூண்டனர். அந்நிய கலாச்சார அடிமைச்சின்னங்களாகிய ஆடை முறைகளைக் கூடப் பலர் துறந்தனர். தேசிய ஆடைக்கோலங்களைத் தலைவர்கள் கூடத் தழுவிக் கொள்ளும் அளவிற்கு, தேசிய உணர்வு வீறு கொண்டது. இவ்வாறு காந்தி வழி நின்று தேசிய பழம்பெரும் பண்பாட்டையும் சீலத்தையும் காப்பாற்றும் நோக்கத்தோடு பலப்பல சங்கங்களும் நாடெங்கும் தோன்றலாயின. அவ்வாறு தோன்றிய சங்கங்களுள், மிக பிரபல்யம் வாய்ந்தது அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் ஆகும்.

இந்தச் சங்கம் நிறுவப்பட்டு இப்போது முப்பது ஆண்டுகளாகின்றன. காந்தி தத்துவத்தை நாடு முழுவதிலும் பரப்பும் நோக்கத்தோடு பல செயற்றிட்டங்களில் ஈடுபட்டு இச்சங்கம் உழைத்து வந்திருக்கின்றது. தென்னிலங்கையிலுள்ள காந்தீய நிறுவனங்களோடு இணைந்து பல சிரமதான சாதனைகளில் பங்குபற்றி, தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் சீரிய பணியையும் ஆற்றி வந்துள்ளது. இச்சங்கத்தின் சிறந்த இலட்சியங்களில், ஆதரவு அற்றோருக்கு — முக்கியமாக ஆதரவற்ற குழந்தைகளுக்கும், ஆதரவற்ற பெண்களுக்கும் — வாழ்வளிக்கும் கைங்கரியத்தையே தலைசிறந்த பணியாகக் கொள்ளப் பட்டமையால், கிளிநொச்சியிலுள்ள உருத்திரபுரம் எனும் கிராமத்தில், ஆறு ஏக்கர் காணியில், ஆதரவற்ற ஆண்குழந்தைகளுக்கு என காந்தி நிலையம் என்னும் பெயரையுடைய குழந்தைகள் இல்லம் ஒன்று இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டது. இந்த இல்லத்திலே அநேக ஆதரவற்ற பிள்ளைகளுக்கு சகல வசதிகளும் கொடுத்து, விவசாயம், நெசவு, அச்சு முதலிய கைத்தொழிற் பயிற்சிகளும் அளித்து, அண்மையிலுள்ள பாடசாலையில் கல்வி வாய்ப்பும் வழங்கி வரப்படுகின்றது. இந்த இல்லத்திற்கு கட்டிடங்கள் போதா. தொழிற்பயிற்சிக்கு வேண்டிய நவீன கருவி சாதனங்களும் போதா. வாழ்க்கை வசதிகளைச் செழுமைப் படுத்துவதற்கும் நிதி போதாது. ஏதோ இயன்றமட்டில் இத்தனை ஆண்டுகளாக இந்த நிறுவனத்தை பேணிக்காத்து வந்துவிட்டோம். ஆனால், இதனை மேலும் மேலும் திருந்திய முறையில் விருத்தி செய்வதற்குப் பண உதவி பெரிய அளவில் வேண்டப் படுகிறது. அநாதைக் குழந்தைகளுக்கு அன்பு காட்டி வாழ்வளிக்கும் புண்ணியத்திலும் பார்க்க உன்னதமான வேறு புண்ணியம் இல்லை. ஆகையால், தர்ம சிந்தையுடைய அன்பர்கள் இக் குழந்தை இல்லத்தின் வளர்ச்சிக்குக் கைநிறைந்த — உளம் நிறைந்த — உதவிகளைச் செய்வார்கள் என்று நம்புகின்றோம்.

## அன்னை கஸ்தூரிபாய் இல்லம்

கதியற்ற பெண்களுக்கு விமோசனம் அளிக்கும் நோக்கமாக தர்மபுரத்தில் தாபிக்கப்பட்டிருக்கும் 'கஸ்தூரிபாய் இல்லம்' என்று அழைக்கப்படும் நிறுவனம் இச் சங்கத்தின் ஆதரவில் இயங்கி வருகின்றது.

காந்தியடிகளின் நூற்றாண்டு ஞாபகார்த்த நிறுவனங்களுள் இதுவும் ஒன்று.

இதற்கு 1969 ஆம் ஆண்டிலேயே ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இப்பொழுது இது ஒரு சிறு கட்டிடத்தில் மட்டும் இயங்கி வருகின்றது.

இதற்கென ஏறக்குறைய இருபத்தைந்து ஏக்கர் நிலம் அரசாங்கத்தால் தரப்பட்டுள்ளது.

ஆதரவற்ற ஏழைப்பெண் குழந்தைகள். விதவைகள் முதலியோர் பலர் யாழ்ப்பாணத்திலிருந்தும் பிற பகுதிகளிலிருந்தும், விமோசனம் தேடி இந்த நிறுவனத்தை நாடி வரும் நிலையில் இருக்கின்றனர்.

அவர்களையெல்லாம் ஏற்று ஆதரிக்கும் அளவுக்கு இந்த நிறுவனம் இன்னும் வளரவில்லை.

பல நூற்றுக் கணக்கான அநாதைப் பெண்களுக்கு நிழல் தரும் ஒரு பெரிய விருட்சமாக இந்த நிறுவனம் விரைவில் வளர வேண்டும் என்பது எங்கள் ஆசை. அப்போதுதான், இந் நாட்டின் பல பாகங்களிலும் நம் கண்ணிற்குப் பட்டும் படாமலும் அவலக் கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கும் ஆதரவற்ற பெண்களுக்கு ஆறுதல் வழங்க முடியும்.

சமூகத் துறையில், நாம் செய்ய வேண்டிய — துன்பம் துடைக்கும் — பணிகள் பல இருந்த போதிலும், இவ்வாறு ஆதரவற்றுச் சஞ்சலத்தில் மூழ்கிக் கிடக்கும் தையலாருக்குக் கைகொடுத்துக் கரையேற்றும் பணியிலும் பார்க்க, துரிதமாகச் செய்யப்

[● 4ஆம் பக்கம் பார்க்க]

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

# இருபது ஆண்டுகள் பூர்த்தியாகும் இனிய பணி

விவசாயத்திலும், குடிசைக் கைத்தொழில்களிலும், இளைஞர்க்குப் பயிற்சி அளிப்பதன் அவசியத்தை உணர்ந்த அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் கிளிநொச்சி உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலில் அரசினர் கொடுத்த ஆறு ஏக்கர் நிலத்தில் கமத்தொழில், கைத்தொழில் பயிற்சி நிலயத்தை நிறுவத் தீர்மானித்தது.

மகாத்மா காந்தி அடிகளின் ஆதாரக் கல்வியைச் செயற்படுத்தும் [illegible]ிய பணியிலீடுபட்டிருந்த, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஸ்ரீ. ஈ. டபிள்யூ. அரியநாயகம் அவர்கள் 1957இல் பயிற்சி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி 'காந்தி நிலையம்' எனப் பெயரிட்டு ஆசீர்வதித்தார். இப்போது நிலயத்தில் அனுதரவான 15 பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களில் நீதிமன்றத்தின் மூலம் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்ட பிள்ளைகளும், உணவுச் செலவில் ஒரு பகுதியைத் தந்து வளரும் பிள்ளைகளும் மிக வறிய நிலையிலுள்ள குடும்பத்துப் பிள்ளைகளும் உள்ளனர்.

காந்தி நிலயப் பிள்ளைகள் சாதி, மத, இன, வர்க்க பேதமின்றி பராமரிக்கப்பட்டு காந்தீய — சர்வோதய இலட்சிய நெறிகளுக்கமைய பயிற்றப்படுகின்றனர். மாணவர் நெற்செய்கை, காய்கறி பயிரிடுதல் ஆகிய விவசாயத் துறைகளிலும் பயிற்சி பெறுகின்றனர்.

இங்கு 'கோகுலம்' ஒன்றும் உள்ளது. இதில் எழுபத்தைந்து மாடுகளுள்ளன. கால் நடை வளர்ப்பிலும் மாணவர் பயிற்சி பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

சமையல், சாப்பாட்டுத் தேவைக்காக ஒரு சிறிய கிணறும், பிள்ளைகள் நீராடவும், நீர்ப்பாய்ச்சவும் இரு பெரிய கிணறுகளும் கட்டப்பட்டுள்ளன. சமையலறையும், சாப்பாட்டு மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன. இம் மணடபத்தில் ஒரே முறையில் நூறு பிள்ளைகள் இருந்து சாப்பிட முடியும். ஐம்பது பிள்ளைகளுக்கு வசதியான படுக்கை அறைகளைக் கொண்ட கட்டிடமும் உண்டு.

காந்தி நிலயத்தில் ஒரு நெசவாலை ஒழுங்காக நடைபெற்று வருகிறது. கிராமத்திலுள்ள பெண் பிள்ளைகள் வந்து நெசவு செய்கிறார்கள். இங்கு பயின்ற பல மாணவிகள் நெசவு ஆசிரியப் பயிற்சியில் தேறி இருக்கிறார்கள்.

கரைச்சி கிராம சபை ஆயுள் வேத மருந்துச் சாலையை நடத்தவும், கரைச்சி தெற்கு, ப. நோ. கூட்டுறவுச் சங்கம் ஒரு கூட்டுறவுக் கடையை நடத்தவும் காந்தி நிலயம் இரு அறைகளைக் கொடுத்து உதவி உள்ளது. இதனால் காந்தி நிலயத்தைச் சூழவிருக்கும் பொதுமக்கள் பெரிதும் நன்மை பெறுகிறார்கள்.

காலத்துக்குக் காலம் கத்தரி, மிளகாய் நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான கன்றுகள் வடபகுதியில் பல பாகங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

காந்திநிலய மாணவர் இல்லத்தில் இதுவரை 90 மாணவர்கள் பயிற்சி பெற்றுத் தத்தம் உறவினர்களுடன் சென்று, அல்லது சொந்த இடங்களுக்குச் சென்று விவசாயத்திலீடுபட்டு இப்போது நல்லநிலையில் இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

தோட்டத்து மாணவர்கள் பலர் காந்தி நிலயத்தில் பெற்ற பயிற்சி அனுபவத்தைக் கொண்டு தமிழ்நாடு சென்று அங்கு விவசாயத் துறைகளில் முன்னின்று சுயமுயற்சியால் வாழ்வதை அறிந்து ஆனந்தமடைகின்றோம்.

1976இல் நாம் தமிழ்நாடு சென்றபோது காந்தி நிலய மாணவர்கள் சிலரை சந்தித்து சர்வோதய வாழ்க்கை முறைகளைக் கண்டு பெருமைப்பட்டோம்.

காந்தி நிலய மாணவர் இல்லத்தில் சென்ற ஐந்து வருடங்களாக சுயதேவையைப் பூர்த்தி செய்து வருகின்றோம். காந்தி நிலயத்துக்குக் காலஞ்சென்ற கௌரவ இந்தியத் தூதுவர் கலாநிதி. பீம் சென் சச்சார் அவர்கள் 21-08-66 இல் வருகை தந்து நம் பணிகளைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

திருமதி. ஆஷாதேவி—அரியநாயகம் அவர்கள் 30-06-68இல் காந்தி நிலயத்துக்கு வருகை தந்து ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

சர்வோதயத் தலைவர் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண், திருமதி. பிரபாவதிதேவி ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆகியோர் 09-01-69இல் காந்தி நிலயத்திற்கு வருகை தந்து ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

லோகயாத்திரைச் சகோதரிகள் 18-09-74இல் காந்தி நிலயத்திற்கு வந்து ஒரு நாள் தங்கி இங்குள்ள பணிகளைப் பார்வையிட்டார்கள். இவர்கள் காந்தி நிலயத்தில் ஒரு பெரிய கிணற்றைக் கட்டுவதற்கு அத்திவாரமிட்டனர். இக்கிணறு வற்றாத வாவியாக சுமார் 3 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கின்றது.

காந்தி அமைதி நிறுவனத்தின் தலைவர் திரு. ஆர். ஆர். திவாகர்ஜீ 26-4-78இல் காந்தி நிலயத்துக்கு வருகை தந்து அங்கு நடைபெற்ற கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார்கள். அத்துடன் ஸ்ரீ அரியநாயகம் ஞாபகார்த்த கலாச்சார மணடபத்திற்கும் அத்திவாரமிட்டார்கள். இம் மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அன்பர்கள் ஆதரவை வேண்டுகிறோம்.

காந்தீய—சர்வோதய இலட்சியங்களுக்கமைய இலங்கையில் தொண்டர்

[● 4ஆம் பக்கம் பார்க்க]

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை கஸ்தூரிபாய்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ பல்லாற்றானும் உதவி புரியும் என்றுநாம் எதிர்பார்க்கலாம். முற்போக்கு எண்ணமும் செயற்றிறனும் கொண்ட மக்கள் அனைவரும் இதனுடன் சேர்ந்து உழைக்க முடியுமாயின் நிச்சயம் இக்கனவும் நனவாகும்.

பரந்தன் வழி, தருமபுரத்தில் அமைந்து உள்ள அன்னை கஸ்தூரிபாய் இல்லம் பல இடர்களுக்கு மத்தியில் கட்டி எழுப்பப் பட்டது, இன்று சகல இடர்களையும் தாண்டி வெற்றிநடை போடுகிறது. தற்போது அங்கு வாழ்ந்து தம் வாழ்க்கை நெறிகளைக் கற்றுக் கொண்டிருக்கும் பெண்கள் பல கைத்தொழில்களையும் பயின்று வருகிறார்கள். அப்பளம் செய்தல், தையல் வேலைகள் செய்தல், விவசாயப் பயிற்சிகள் போன்றவற்றில் திறமையுடையோராய்த் திகழ்கிறார்கள். அதனால் தம் வாழ்க்கைக்குத் தேவையான பணத்தைத் தாமே தம் சொந்தக் கைகளால் உழைக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இதன்மூலம் அவர்கள் கஸ்தூரிபாய் இல்லத்தை விட்டு வெளியேறும் போது உள்ளத்தில் நல்ல எண்ணங்களையும் உடலில் தொழிற்பயிற்சியையும் பெற்று வெளியேறுகிறார்கள். எனவே நற்பிரசைகளாக வாழ்வார்கள். அவர்கள் தம் உழைப்பில் தம் செலவு போக மீதிப் பணத்தை வீடு செல்லும்போது எடுத்துச் செல்லும் வாய்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

சர்வோதயத் தலைவர் ஸ்ரீ. ஜெயப்பிரகாஷ் நாராயண், திருமதி. பிரபாதேவி ஜெயப்பிரகாஷ் நாராயண் இருவரும் 09.01.1969 இல் வருகை தந்து காந்தி நூற்றாண்டு விழா ஞாபகார்த்தத் திட்டமாக அன்னை கஸ்தூரிபாய் இல்லத்திற்கு அத்திவாரமிட்டு ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா மில்க்வைற் அதிபர் அவர்கள் இந்த இல்லத்திற்கு ஒரு பெரிய கிணறு அமைப்பதற்குப் பேருதவி செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் சபையின் சிபார்சுக்கமைய சமகி நிதிச்சபை இப்பணிகளை ஆரம்பித்துக் கொள்வதற்காக 25,000 ரூபாவை கடனாக உதவியுள்ளது.

இப்போது இங்கு 10 பெண்கள் பயிற்சி பெறுகின்றார்கள். அன்னை கஸ்தூரிபாய் இல்லம் அப்பளம் கைத்தொழிலை முதலில் ஆரம்பித்துள்ளது. இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

அடுத்து தையல் தொழில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. உஷா கைத்தொழில் நிறுவனத்தினர் ஐந்து தையல் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னை கஸ்தூரிபாய் இல்லத்தில் பெண்கள் சிறுமிகள் பாதுகாப்பாக இருப்பதற்கு தகுதியான விடுதியும் காணியைச் சுற்றிப் பாதுகாப்பான மதிலும் அமைக்கப்பட வேண்டும். மேலும் பெண்களுக்கான பல வசதிகளையும் தேடவேண்டும். இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு இரண்டு இலட்சரூபாவரை தேவைப்படுகிறது. தியாக எண்ணங் கொண்ட இதயங்களும், சங்கங்களும் இவ்வில்லத்திற்கு தம்மாலான சகல உதவிகளையும் அளித்து ஆதரவு நல்குமாறு தயவன்புடன் வேண்டுகிறோம்.

அன்னை கஸ்தூரிபாய் இல்லத்தில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

கௌரவ நிர்வாகி:<br>அன்னை கஸ்தூரிபாய் இல்லம்,<br>தருமபுரம்,<br>பரந்தன் — வழி

— செல்வி இ. சிவமலர்

## இருபது ஆண்டுகள்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையும் ஊழியர்களையும் உருவாக்கும் பணியை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் 'காந்தி நிலையம்' மூலம் தொடங்கியுள்ளது. இத்தகைய பல நிலையங்கள் நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு ஆக்க வேலைகள் நடைபெறவேண்டும். படித்த வாலிபர்கள் முன்வந்து தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியையாவது இவ்விலட்சியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் குடும்பத்தினரும் இப்பணியிலீடுபடல் வரவேற்கத்தக்கதே. அவ்வாறு பொதுப்பணி ஏற்கும் தொண்டர்களின் வாழ்க்கைத் தேவைகள் சர்வோதய இலட்சியங்களுக்கமையப் பூர்த்தி செய்யப்படும்.

## காந்தி நிலையம்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டிய பணி வேறு ஒன்று இருப்பதாகச் சொல்ல முடியாது.

இந்தத் திருப்பணியை நிறைவேற்றி வைப்பதற்கு அன்பர்களுடைய ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

இந்த இடத்திலே ஒரு பெரிய ஆழமான கிணற்றை தமது செலவில் தோண்டிக் கட்டித் தந்த பெருவள்ளல் மில்க்வைற் தொழிலதிபர் திருவாளர் கனகராசா அவர்களுக்கு இச் சங்கம் மட்டும் அன்றி இச் சமூகம் முழுவதுமே என்றும் கடமைப் பட்டுள்ளது, என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றோம்.

இந்த நிறுவனத்தை நிர்வகிப்பதற்கு தகுதி வாய்ந்த முழுநேரப் பெண் ஊழியர்கள் போதியளவு இவரை கிடைக்காமையும் ஒரு பெருங் குறையாக இருந்து வந்தது. ஆனால் இப்போது சில திறமையான முழுநேரப் பெண் ஊழியர்கள் முன்வந்திருப்பதால், அக்குறையும் ஓரளவு நீங்கி விட்டது. ஆகவே இதன் விருத்திக்கும் மலர்ச்சிக்கும் உடனடியாக வேண்டியது பொருளேயாகும்.

'சஞ்சலங் கலந்த போது தையலாரை உய்ய வந்து அஞ்சல் அஞ்சல் என்கிலாத ஆண்மை என்ன ஆண்மையே' என்ற கவிஞன் வாக்கை நினைவு கூர்ந்து, துன்பத்தில் வீழ்ந்து தவிக்கும் எங்கள் அநாதைச் சகோதரிகளைக் கைதூக்கி விடும் பணிக்கு நிறையப் பொருள் தந்து உதவுமாறு பொருள் படைத்த பெருமக்களையெல்லாம் வேண்டிக் கொள்கின்றோம்.

— முதலியார். செ. சின்னத்தம்பி.

---

இத்தகைய இலட்சியங்களில் ஈடுபாடுள்ள அன்பர்கள் அநுதாபிகள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய வேளை வந்துவிட்டது. சுயநலத்தின் அடிப்படையாகத் தோன்றும் போட்டி, பொறாமை முதலிய குணங்களும், இக்குணங்களினால் ஏற்படும் சமூக இன்னல்களும், அதனால் ஏற்படும் நாட்டுப் பிரச்சனைகளும் தீர திரிகரண சுத்தியுடன் சர்வோதயப் பணியிலிறங்குவோமாக.

— சி. க. வேலாயுதபிள்ளை

இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் விவேகானந்தர் மேடு, கொழும்பு - 13 சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இலங்கையில் புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org